# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2051 - 2017 දෙසැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2017.12.22

*2051 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 2374 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 2378 |
| ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** மருத்துவம் (திருத்தம்) சட்டமூலம் 2017, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது *2018, சனவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: இன்ஸ்ட்டிடியுட் ஒப் லெங்வேஜ் அன்ட் கல்ச்சர் டிவலொப்மன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017. 10.27
கம்பனி இலக்கம் : பீவீ 126733
பதிவு முகவரி : இல. 743 2/ஏ, முவன்ஹெலவத்தை, 3 ஆவது உட்தெரு, தலங்கமை வடக்கு, மாலபே

கம்பனிச் செயலாளர்.

12-617

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட தனியார் கம்பனி 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: எம் ஆர் டி மெசினரி தனியார் கம்பனி
கம்பனி இலக்கம் : பீவீ 125379
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 21/1, ஹில் வீதி, கம்பளை

கம்பனிச் செயலாளர்.

12- 627

## கீல்ஸ் சிப்பிங் ( பிறைவேட்) லிமிட்டட்
## (பீவீ 1272)
## பங்குதாரர்களின் தன்னார்வமான ஒடுக்குதல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331 (1) மற்றும் (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

### இறுதிக் கூட்டம் மற்றும் கம்பனியைக் கலைத்தல் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் ஒடுக்குதல் எவ்வாறு நடாத்தப்பட்டது என்பதைக் காண்பிக்கின்ற ஒரு கணக்கையும் மற்றும் அது தொடர்பாக ஒரு விளக்கத்தையும் முன்வைப்பதற்கான நோக்கத்திற்காக, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(1) மற்றும் (2)ஆம் பிரிவுகளின் கீழ் கம்பனியின் பொதுக்கூட்டம் 2018, சனவரி மாதம் 29 ஆம் திகதி, இல. 117, சித்தம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரியில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் என இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

கீல்ஸ் கன்சல்டன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
ஒழித்துக்கட்டுனர்.

இல.117,
சேர் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,
கொழும்பு 2,
2017, திசெம்பர் 04.

12- 629

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: லக் எசன்ஸ் இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீவீ 127138
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.11.10

பதிவு முகவரி : 2 ஆம் கட்டம், டெம்ப்லேபர்க் இன்டஸ்ரியல் பார்க்- பணாகொட, ஹோமாகம

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,

ஏ.எல்.எஸ். என். சிறிவர்தன,
கம்பனிச் செயலாளர்.

12- 634

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஏஷியா என்ட் நஷியாணி யா பெடரேஷன் ஒப் ஒப்ஸ்டெட்ரிக்ஸ் எண்ட் கைனெகொலஜி (கரண்டி) லிமிட்டட்
பதிவு இல. : ஜீஎல் 2459

*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017, நவெம்பர் 06*
*பதிவு முகவரி : எஸ். எல். சீ. ஓ.ஜீ. ஹவுஸ், இல. 112, மொடல் ஃபார்ம் வீதி, கொழும்பு 8*

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,

எப். ஜே. எண்ட் ஜீ.டீ. சேரம்.

12- 635

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளின் கூட்டிணைத்தல் பற்றிய பொது அறிவித்தல்.-

*கம்பனியின் பெயர்:* எல் என்ட் ஜீ கன்சல்டன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனியின் இல. : பீவீ 127668*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.11.28*
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல. 27/1, பெப்பிலியான வீதி, நெதிமாலை, தெஹிவளை

டபிள்யூ . எஸ். வீரமன்
கம்பனிச் செயலாளர்.

12- 638

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்:* றோயல் கேட் ஜெனரல் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனியின் இல. : பீவீ 113841*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.05.23*
*பதிவு முகவரி :* இல. 240, பி. கே. வீதி, ஏறாவூர்

பணிப்பாளர்.

12- 647

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், கம்பனியாக்கப்பட்டுள்ளது.-

*கம்பனியின் பெயர்:* கே. ஆர். ஜோஸப் இன்வெஸ்ட்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனியின் இல. : பீவீ 127453*
*பதிவுத் திகதி : 2017, நவெம்பர் 21*
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல. 104-1/8, மனிங் பிளேஸ், கொழும்பு 6

திருமதி எஸ்.இராஜகுலேந்திரா,
சட்டத்தரணி.

12- 667

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றியமைக் கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் முன்னைய பெயர்:* எரோ கெபிடல் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் : பீவீ 110266*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.06.22*
*பதிவு முகவரி :* இல. 116 பி, றொஸ்மிட் பிளேஸ், கொழும்பு 7
*கம்பனியின் புதிய பெயர்:* ஏஸ் கெபிடல் (பிறைவேட்) லிமிட்டட்

சி. பாலித ஜே. டபிள்யூ. மதிவ்
கம்பனிச் செயலாளர்.
Sec/1159/94

12- 668

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்:* தர்ஷன கிரெனைட் அன்ட் மார்பிள் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் : பீவீ 99631*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2014.07.10*
*பதிவு முகவரி :* இல. 263/1, கண்டி வீதி, மிரிஸ் வத்த, முதுன்கொட

கம்பனிச் செயலாளர்.

12-716

**கோல்ட் மென்ட்டிஸ் ( லங்கா ) கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட் ) லிமிட்டட்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

கோல்ட் மென்ட்டிஸ் (லங்கா) கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21ஆம் திகதி பீவீ 127469 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும் புதிய கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியானது எம் & என் கட்டிடம் (5 ஆம்மாடி), இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 03 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

சரவணன் நீலகண்டன்
பணிப்பாளர்.
என் அன்ட் என் ஏஜென்ஸ்
அன்ட் செக்ரட்டறீஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.

எம் & என் கட்டிடம் ( 5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 00300.

12-739

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், நாவலப்பிட்டிய பிளான்டேஷன் (பிறைவேட்) லிமிட்டட் எனும் கம்பனி 2017, மே மாதம் 03 ஆம் திகதி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் இல. : பீவீ 122039
பதிவு அலுவலகம் : இல. 78/2, தேவால வீதி, மாகோல வடக்கு, மாகோல

கம்பனிச் செயலாளர்.

12-751

---

**வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் கூட்டிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்**

கெளனி வெலி ரிசோர்ட்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட் என்ற கம்பனி 2017 , நவெம்பர் 22 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டது என்ற விபரம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: கெளனி வெலிரிசோர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 127491
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல.400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017, நவெம்பர் 22

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

இல. 400,
டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.
2017, நவெம்பர் 28.

12-770

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர்: ஈகள் குளோபல் எக்ஸ்ப்ரஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 127632
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.11.27
பதிவு முகவரி : இல. 281, I/I, 1 ஆம் மாடி, ஆர். டி மெல் மாவத்தை, கொழும்பு 3

கம்பனியின் பெயர்: வின் வின் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 127817
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.12.06
பதிவு முகவரி : இல.453,/I, ஹவ்லொக் வீதி, கொழும்பு 6

பினான்சியல் அன்ட் பிசினஸ்
அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்.

12-779

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: கே. எஸ். எல். கன்ஸ்ட்ரக்சன் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 120084
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.02.15
பதிவு முகவரி : இல. 35/1, பஸல்ஸ் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 6

12-809

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 31/1ஏ, பாரோன் ஜயதிலக்க மாவத்தை, ஹிம்புட்டான, அங்கொடை என்ற முகவரியில் வசிக்கும் நெல்கா சாமினி லியணாரச்சி ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு அநுஷிகா உபமாலி என்தனி என்பவரினால் 1999, ஒற்றோபர் 22 ஆம் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட 06 ஆம் இலக்கம் உடையதும் இல. 31/1ஏ, பாரோன் ஜயதிலக்க மாவத்தை, ஹிம்புட்டான , அங்கொடை என்ற முகவரியில் வசிக்கும் நுவன் பதிரணகே சந்திரசிறி பத்திரண என்பவருக்கு வழங்கப்பட்டதுமான அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அனைத்து பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றோம்.

நெல்கா சாமினி லியணாரச்சி .

12- 600

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொரலஸ்கமுவ, அபேரத்ன மாவத்தை, இல. 125 என்ற இடத்தைச் சேர்ந்த ப்ரீத்தி மாலா விஜயவர்தன ஆகிய என்னால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், பொரலஸ்கமுவ, இல. 125, அபேரத்ன மாவத்தை எனும் இடத்தைச் சேர்ந்த சரத் சந்திர அமரதாச அபேகோன் என்பவருக்கு 2012.09.16 ஆம் திகதி கொஸ்பெலவின்ன பிரசித்த நொத்தாரிசு நிரோஷன் ரனசிங்க பண்டார அவர்களால் இல. 1510 பத்திரத்தின் மூலம் சான்றளிக்கப்பட்ட பொது அற்றோணித் தத்துவம், அற்றோணித் தத்துவ உரிமையாளரின் இறப்பின் மீதான சட்டவலுவை இழந்துள்ளது என்பதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் சகல பிரஜைகளுக்கும் இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

12-712

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொரலஸ்கமுவ, அபேரத்ன மாவத்தை, இல. 125 என்ற இடத்தைச் சேர்ந்த ருவந்தி சஷிகா விஜயவர்தன மற்றும் ருவன்க ஷேஷான் விஜேவர்தனஆகிய எங்களால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், பொரலஸ்கமுவ, இல. 125, அபேரத்ன மாவத்தை எனும் இடத்தைச் சேர்ந்த சரத் சந்திரத அமரதாச அபேகோன் என்பவருக்கு 2014.06.15 ஆம் திகதி அவஸ்திரேலியா சொலிசிட்டர் மாயா நாணயக்கார அவர்களால் சான்றளிக்கப்பட்டு வழங்கப்பட்ட பொது அற்றோணித் தத்துவம், அற்றோணித் தத்துவ உரிமையாளரின் இறப்பின் மீதான சட்டவலுவை இழந்துள்ளது என்பதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் சகல பிரஜைகளுக்கும் இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

12-713

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொரலஸ்கமுவ, அபேரத்ன மாவத்தை, இல. 125 என்ற இடத்தைச் சேர்ந்த குக்குலகே ஜானக பந்துல விஜயவர்தன ஆகிய என்னால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், பொரலஸ்கமுவ, இல. 125, அபேரத்ன மாவத்தை எனும் இடத்தைச் சேர்ந்த சரத் சந்திர அமரதாச அபேகோன் என்பவருக்கு 2017.12.09 ஆம் திகதி கொஸ்பெல வின்ன பிரசித்த நொத்தாரிசு நிரோஷன் ரனசிங்க பண்டார அவர்களால் இல. 558 பத்திரத்தின் மூலம் சான்றளிக்கப்பட்ட பொது அற்றோணித் தத்துவம், அற்றோணித் தத்துவ உரிமையாளரின் இறப்பின் மீதான சட்டவலுவை இழந்துள்ளது என்பதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் சகல பிரஜைகளுக்கும் இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

12-714

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் ஹல்ஒலுவ, கல்லிந்த தோட்டம், "நிம்மி செவண", இல. 188/5 இல் வசிக்கும் தே.அ.அ.இல. 707961107V கொண்ட இமதுவ ஆரச்சிலாகே நீதா எனும் நான், இத்தல் இலங்கை அரசுக்கும் அதன் மக்களுக்கும் தெரிவித்துக் கொள்வது கண்டி பிரசித்த நொத்தாரிசு திரு. அர்ஜுன கரல்லியத்த என்பவரினால் 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் ம்ாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 921 ஆம் இலக்க அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் வசிக்கும் தே.அ.அ.இல. 845671516V ஐ உடைய ஹல்ஒலுவ, கல்லிந்த தோட்டம் , "நிம்மி செவண" , இல. 188/5 இல் வசிக்கும் ராஜவெல்லி அதரகல்லே கெதர சம்மிகா நிஷாமனி அமரதாச என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணித்தத்துவத்தை 2017ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதியில் இருந்து இரத்துச் செய்துவிட்டேன். மேலும் எதிர் காலத்தில் இது தொடர்பான எந்தப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என அறியத்தருகின்றேன்.

12-717

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

மட்டக்களப்பு, இலக்கம் 77, பெயிலி குறுக்கு வீதியில் வசிக்கும் 631210554V எனும் தேசிய அடையாள அட்டையை கொண்டவருமாகிய திரு. அன்டன் பாலக்குமார் சின்னத்தம்பி மற்றும் தேசிய அடையாள அட்டை இல. 638640848V கொண்ட வருமாகிய திருமதி எட்னா அனுரேகா சின்னத்தம்பி ஆகிய நாங்கள் இதே ஊர் இலக்கம் 17/30, குடா ஒழுங்கை, இரண்டாவது பெயிலி குறுக்கு வீதி, மட்டக்களப்பில் வசிக்கும் 843371936V என்ற தேசிய அடையாள அட்டையைக் கொண்டவரான மனோகரன் ரோசான் பிரதீபன் என்பவருக்கு எங்களால் வழங்கப்பட்ட 1418 ஆம் இலக்க 2010.04.29ஆம் திகதியிடப்பட்டு மட்டக்களப்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். ஸ்ரனில்லோஸ் அவர்களால் அத்தாட்சிப்படுத்தி கிழக்கு வலய உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் 115 தொடர் இலக்கத்தில் 2010.05.11 ஆம் திகதி 18 ஆம் இலக்க பதிவுப் புத்தகத்தில் 77 ஆம்

பக்கத்தில் பதிவு செய்யப்பட்ட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்து செய்து வெறிதாக்கப்பட்டுள்ளது என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்கள் அனைவருக்கும் அறியத்தருவதுடன் மேற்படி அற்றோணித்தத்துவம் மூலம் மனோகரன் ரோசான் பிரதீபன் என்பவரால் இன்று தொடக்கம் புரியப்படும் எந்தவித கொடுக்கல் வாங்கலுக்கும் வேறு செயற்பாடுகளுக்கும் நாங்கள் எவ்விதத்திலும் பொறுப்பு கூறமாட்டோம் என இத்தால் அறியத்தருகின்றோம்.

திரு. அன்டன் பாலக்குமார் சின்னத்தம்பி,
திருமதி எட்னா அனுரேகா சின்னத்தம்பி.

12-726

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

தற்போது கொழும்பு 05, ஜாவத்தை வீதி, இல. 121 இல் வசிப்பவரும் LONDON SW 165 QB , ACA CIA ROAD, 87 ஐச் சேர்ந்தவருமாகிய மஹிந்த லக்ஷ்மன் வீரசூரிய ( 452730146V என்ற தேசிய அடையாள அட்டை உரித்தாளர்) ஆகிய நான், இத்தால் பொது மக்களுக்கு அறிவித்துக் கொள்வதாவது கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எல். நாணயக்காரவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு கொழும்பு 5, ஸ்பத தோடே அவின்யூ, இல. 7 ஏ ஐச் சேர்ந்த களுஹத் லொய்ட் ரஸல் டீ ஆப்ரூ ராஜபக்ஷ ( 493532006V என்ற தேசிய அடையாள அட்டை உரித்தாளர்) சார்பாக என்னால் வழங்கப்பட்ட 2012.05.26 ஆந் திகதியிடப்பட்ட 127 ஆம் இலக்க பொது அற்றோணி அதிகாரத்தை நான் இரத்துச் செய்து இல்லாதொழித்துள்ளதாகவும் மேற்படி அற்றோணி அதிகாரம் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

மஹிந்த லக்ஷ்மன் வீரசூரிய .

12-775

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

தற்போது கொழும்பு 05, ஜாவத்தை வீதி, இல. 121 இல் வசிப்பவரும் LONDON SW 165 QB , ACACIA ROAD, 87 ஐச் சேர்ந்தவருமாகிய மஹிந்த ரோஹினி வீரசூரிய ( 487260246V என்ற தேசிய அடையாள அட்டை உரித்தாளர்) ஆகிய நான், இத்தால் பொது மக்களுக்கு அறிவித்துக் கொள்வதாவது கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். ஜீ.ஜே.எம். வீரதுங்க சேனநாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு கொழும்பு 5, ஸ்பதோடே அவின்யூ, இல. 7 ஏ ஐச் சேர்ந்த களுஹத் லொய்ட் ரஸல் டீ ஆப்ரூ ராஜபக்ஷ (493532006V என்ற தேசிய அடையாள அட்டை உரித்தாளர்) சார்பாக என்னால் வழங்கப்பட்ட 2004.09.18 ஆந் திகதியிடப்பட்ட 409 ஆம் இலக்க பொது அற்றோணி அதிகாரத்தை நான் இரத்துச் செய்து இல்லாதொழித்துள்ளதாகவும் மேற்படி அற்றோணி அதிகாரம் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

ரோஹினி வீரசூரிய .

12-776

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்ளப்படுவதாவது, கொழும்பு 06, கிருளப்பனை அவின்யூ, இல. 73/22 ஐச் சேர்ந்த லீலாநந்த உபாலி அபேசிறியினால் கொழும்பு 06, கிருளப்பனை அவின்யூ, இல. 73/22 ஐச் சேர்ந்த திலக் ஜயவர்தன சார்பாக வழங்கப்பட்ட அற்றோணி தத்துவம் மற்றும் எழுத்து மூல அதிகாரத்தின் பதிவிலுள்ள 112 ஆம் பாகம், 61 ஆம் பக்க 241 ஆம் நாட்புத்தகத்தின் கீழான பதிவுசெய்யப்பட்ட 2013.01.01 ஆம் திகதியிடப்பட்ட 5291ஆம் இலக்க அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்யப்பட்டது என்பதாகும். மேற்படி திலக் ஜயவர்தனவினால் எனது சார்பாக மற்றும் எனக்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலையும் லீலாநந்த உபாலி அபேசிறி ஆகிய என்னால் பொறுப்பேற்கப்பட மாட்டாது என்பதாகும்.

லீலாநந்த உபாலி அபேசிறி.

2017, ஒற்றோபர் 29.

12-785

---

## ஏல விற்பனைகள்

### தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

பகிரங்க ஏல விற்பனை

**1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான விற்பனை பற்றிய அறிவித்தல்**

**வவுனியா, சாளம்பைக்குளம், இயன்கனவூர் கிராமத்தில் அமைந்துள்ள பயளிக்குளம் என அழைக்கப்படும் லொட் 1 என அடையாளமிடப்பட்டுள்ள 07 ஏக்கர் 01 றூட் 07 பேர்ச்சு விஸ்தீரணமுள்ள பெறுமதிமிக்க காணியும் கட்டிடங்களும்.**

**வடமாகாணம், வவுனியா மாவட்டம் ,வவுனியா பிரதேச செயலகப் பிரிவு , வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை எல்லையினுள் சொங்கசலாமைக்குளம் கிராம அலுவலர் பிரிவு இயன்கனவூர் கிராமத்தில் அமைந்துள்ள 2016.07.07ஆம் திகதியிடப்பட்ட 2868 ஆம் இலக்க வரை படத்தில் லொட் 1 என அடையாளமிடப்பட்டுள்ள காணித்துண்டு.**

**மற்றும் இக்காணியில் மற்றும்/அல்லது கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள காலத்திற்குக் காலம் பொருத்தப்படும் அல்லது நிரந்தரமாக இணைக்கப்பட்டுள்ள அசையா பொறி இயந்திரம் உபகரணங்கள் இணைப்புக்கள் மற்றும் சேவைகள் மின்சாரம் வழங்கும் சாதனங்கள் நீர்வழங்கல் சாதனங்கள் மற்றும் தொலைத்தொடர்புச் சாதனங்கள் உட்பட சகலதும், முன்னேஸ்வர் அன்ட் கம்பனி என்னும் நாமம் மற்றும்**

**மகுடத்தின் கீழ் பங்காளிகளாக வியாபாரம் செய்யும் கந்தசாமி ரமணன் மற்றும் முன்னேஸ்வரகாந்தன் செல்வராணி அவர்களுக்கு தேசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய வசதிகளுக்காகவும் அதன் சார்பாக நிறைவேற்றிய 4713 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் இவ்வங்கிக்கு செலுத்தப்படவேண்டிய தொகைப்பணத்தைச் செலுத்த தவறியதால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கமைய மேற்குறிப்பிட்ட ஆதனம் அதே இடத்தில் வைத்து 2018, சனவரி மாதம் 11 ஆந் திகதி காலை 11.30 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

**மேலதிக விபரங்களுக்கு**.- *2017.12.01 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2017.11.20 ஆந் திகதிய "ஐலன்ட்", "திவயின", மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**ஆதனத்திற்குச் செல்லும் வழி**.- *வவுனியா நகரத்திலிருந்து மன்னார் வீதி ஊடாக ஏறக்குறைய 12 கி.மீ. பயணித்து தலைக்குளம் சந்தியை அடைந்து இடது பக்கம் திரும்பி 1 கி.மீ. அளவு சென்று இடது பக்கம் திரும்பினால் இரன்கரவூர் குள நீர்தாங்கும் பிரதேசத்தை அடையலாம். இப் பிரதேசத்தின் மேலே இவ் ஆதனத்தைக் காணலாம்.*

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- *உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்கு பத்து சதவீதம்);*

*(2) உள்ளூராட்சி மன்ற வரி மற்றும் பெறுமதி சேர்வரி 1%;*

*(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;*

*(4) ஏலத்திற்காகச் செலவிடப்பட்ட முழு விளம்பரச் செலவு ;*

*(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1,500;*

*(6) விற்பனையை உறுதிப்படுத்தும் நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 3,000.*

*மிகுதி 90% கொள்வனவு விலை ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தி முடித்துவிடல் வேண்டும்.*

**உறுதியைப் பார்வையிட மற்றும் மேலதிக விபரங்களுக்கு**: *முகாமையாளர் - சட்டம், கடன் அறவீடுகள், (மீளப் பெறுதல்) தேசிய அபிவிருத்தி வங்கி பீ. எல். சீ , இல.40, நவம் மாவத்தை, கொழும்பு02. தொலைபேசி : 011-2448448,011-7448448.*

*பீ.கே.ஈ.சேனாபதி,*
*நீதிமன்ற ஆணையாளரும்*
*மதிப்பீட்டாளரும் பட்டயம் பெற்ற*
*ஏலதாரர்.*

*இல.134,*
*பெத்தகான வீதி,*
*கோட்டே.*

*தொலைபேசி இல. : 011-2873656, 0777- 672082.*
*தொலை நகல் இல. : 011-2871184.*

*12- 722*

## செலான் வங்கி பீஎல்சீ - கொழும்பு கோட்டை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**ஏல விற்பனை**

*"கடன்பட்டோர் என்ற வகையில் இரத்மலானை (கம்பனி பதிவு இல. என் (பிவிஎஸ்) 12606) டீ மாஸ்டர்ஸ் சிலோன் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்ட சலுகைகளுக்காக செலான் வங்கி பீஎல்சி க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து .*

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிட்டி கோரளை பல்லே பத்து கெஸ்பாவ பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் கெஸ்பேவ பிரதேச சபை எல்லைக்குள் மாப்பே மேற்கு கிராம அலுவலர் பிரிவு , இல. 574 மாப்பேயில் அமைந்துள்ள "வேவவத்த" என்றழைக்கப்படும் காணித்துண்டு 1 அனுமதி பெற்ற நிலஅளவையாளான் எச். எல். குணசேகர என்பவரால் தயாரிக்கப்பட்டு 1991, பெப்புருவரி 25 ஆம் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 3697 இல் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டு அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அங்கு காணப்படுகின்ற கட்டிடத்துடன் பதினைந்து பேர்ச்சு (0ஏ.0றூ.15பே.) விஸ்தீரணத்தை நிலவரைப்படம் 3697 கொண்டுள்ளது.*

*மேல் மாகாணம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் கெஸ்பேவ பிரதேச சபை எல்லைக்குள் மாப்பே மேற்கு கிராம அலுவலர் பிரிவு இல. 574 மாப்பேயில் வரிமதிப்பீட்டு இல. 32 மற்றும் 34 ஜெயா வீதியில் அமைந்துள்ள "வேவவத்த" என்றழைக்கப்படும் காணித்துண்டு 2 அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் எச் எல் குணசேகர என்பவரால் தயாரிக்கப்பட்டு 1991, பெப்புருவரி 25 ஆம் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 3697 இல் துண்டு 2 எனக் குறிப்பிடப்பட்டு அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அங்கு காணப்படுகின்ற கட்டடத்துடன் முப்பத்தெட்டு பேர்ச்சஸ் (0ஏ.0றூ.38பே.) விஸ்தீரணத்தைக் கொண்டதும் நிலவரைப்பட இல. 3697 ஐ கொண்டுள்ளது.*

*மேலே விவரிக்கப்பட்டுள்ள காணியை நான் 2018, சனவரி மாதம் 08 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.*

**காணியைச் சென்றடைகின்ற விதம்**- *பிலியந்தலைச் சந்தியிலிருந்து சரணபால மாவத்தை( மஹரகம வீதி) மார்க்கமாக சுமார் 100 மீ. தொலைவிலுள்ள T சந்திக்கு சுமாராக நடந்து செல்லக்கூடிய வீதியால் சென்றால் பஸ் நிலையத்தை அடையலாம். இந்த இடத்திலிருந்து இடது பக்கமாக திரும்பினால் சரணபால மாவத்தை (மஹரகம வீதி) அங்கிருந்து சுமார் 50 மீற்றர் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வலது பக்கத்தில் அமைந்திருக்கும்.*

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக**.- *தயவு செய்து 2017.11.02ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2017.10.26 ஆந் திகதிய "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதீப" பத்திரிகைகளையும் மற்றும் 2017.11.01 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கட்டணம் செலுத்தும் விதம்.-** வெற்றிகரமான கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் பத்து வீதம் 10% ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (1% பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி;

(3) ஏல விற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%);

(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா ;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா.

விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90 % விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீ யில் வைப்புச் செய்தல் வேண்டும்;

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10 % கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

"காணி உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பிரத்தியேக முகாமையாளர் -(சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, செலான் டவர்,இல.90, காலி வீதி, கொழும்பு 3" எனும் விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-2456475, 011- 5456476.

" மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறி வித்தலின்றி இரத்துச் செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்"

துசித கருணாரத்ன (ச. நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ,
தொலைபேசி இல. : 011-3068185, 2572940

12- 727

---

## செலான் வங்கி பீஎல்சீ - கன்தலே

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

### ஏல விற்பனை

"கடன்பட்டோர் என்ற வகையில் கன்தலேயைச் சேர்ந்த ஹேவா ஜெயசிங்க ஆனந்த பிரதீப் குமார் / கபுகொட்டுவ திஸாநாயக்க முதியன்சேலாகே கல்யாணி மெனிக்க என்பவர்களுக்காக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.

வடமத்திய மாகாணம், பொலனறுவை மாவட்டத்தில் ஹிங்குரக்கொட பிரதேச செயலாளர் பிரிவில் சிங்கள பத்து 71/A, ஹிங்குரக்கொட கிராம அலுவலர் பிரிவில் ஹலமுன கிராமத்தில் அமைந்துள்ள "தமன முகலான " என்றழைக்கப்படும் காணித்துண்டு பொது நிலஅளவையாளரால் தயாரிக்கப்பட்ட இல. F.C. P. Po. 40 இல் துண்டு 179 இல் உள்ளவாறு. இக்காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் முப்பத்திமூன்று பேர்ச்சு (0ஏ. 01றூ.33பே.) அங்கு காணப்படுகின்ற கட்டிடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துடன்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை நான் 2018, சனவரி மாதம் 12 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்-** ஹிங்குரக்கொட பொது பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து மின்னேரியா வீதி மார்க்கமாக 80 மீற்றர் தூரம் சென்று இடது பக்கமாகத் திரும்பி சமூபகார மவாத்தையால் ( பபுல வீதி) சுமார் 500 மீ. வரை சென்று வலது பக்கத்திலுள்ள கிரவல் மோட்டபில் வீதியால் சுமார் 100 மீ. தூரம் சென்றால் குறிப்பிட்ட சொத்து வீதியின் வலது கரையோரத்தில் "வைட் ஹவுஸ்" என்ற பெயரில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.-** தயவு செய்து 2017.06.09ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2017.06.12ஆந் திகதிய "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதீப" பத்திரிகைகளையும் மற்றும் 2017.06.02 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் விதம்.-** வெற்றிகரமான கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் பத்து வீதம் 10% ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (1% பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி;

(3) ஏல விற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%);

(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா ;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா.

விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90 % விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீ யில் வைப்புச் செய்தல் வேண்டும்;

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10 % கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

"காணி உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பிரத்தியேக முகாமையாளர்-(சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, செலான் டவர்,இல.90, காலி வீதி, கொழும்பு 3'' இடமிருந்துந்து பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-2456475,011- 5456476.

'' மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறி வித்தலின்றி இரத்துச்செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்''.

துசித கருணாரத்ன (ச. நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ,
தொலைபேச இல. : 011-3068185, 2572940

12-728

---

### பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ. க.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

***1. பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று, மஹரகமை நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலகம், 526பி ஜம்புகஸ்முல்லை கிராம அலுவலர் பிரிவு, கங்கொடைவிலை கிராமத்தில் அமைந்துள்ளதும் "தியபோரகஹ கும்புற" என அழைக் கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ஏ. ஜயரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2007.11.09 ஆந் திகதி யிடப்பட்ட வரைபட இல. 4074 ஏ இல் குறிப்பிடப்பட்டு துண்டு பி ( உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஏ. ஜயரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2002.11.03 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 4074 இல் துண்டுகள் 2 மற்றும் 4 இன் உப பிரிவாகவும் ஒன்றிணைக்கப்பட்டதாகவும் இருக்கின்ற) என அடையாள மிடப்பட்டதுமான காணியினது)***

***( காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 0றூ. 21.25பே.)***

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- *கொழும்பு கோட்டையிலிருந்து கொழும்பு- இரத்தினபுரி மட்டக்களப்பு A4 பெருவீதி வழியே ஏறக்குறைய 11.6 கிலோ மீற்றருக்கு தெல்கந்தை சந்தியை அடையவும். அங்கிருந்து பழைய கெஸ்பேவ வீதிக்கு வலப்பக்கம் திரும்பி ஏறக்குறைய 225 மீற்றருக்கு அப்பால் விற்பனைக்குரிய ஆதனம் வலப்பக்கத்தில் ( தெல்கந்தை புதிய பொது சந்தை வளவுகளை கடந்து முதலாம் ' துண்டு) அமைந்துள்ளது.*

***2. பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று, கெஸ்பேவ பிரதேச சபை எல்லைகளுக்குள் கட்டுவலையில் அமைந்துள்ளதும் '' மஹதெனிய'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. எஸ். அழஹக்கோன் அவர்களால் தயாரிக்கப்பட்டு 2002, நவெம்பர் 26 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 2433 ஏ இல் குறிப்பிடப்பட்டு துண்டு 6ஏ என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள், மண் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து.***

***( காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 0றூ. 23.50பே.)***

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- *நுகேகொடை சந்தியூடாக பேன் ஏசியா வங்கி - நுகேகொடை கிளையிலிருந்து ஹொரணை வீதி வழியே கொஹுவளை சந்தி கங்காராம வீதியை கடந்து ஏறக்குறைய 150 மீற்றருக்கு இடது பக்கத்திலுள்ள துண்டு 14 (வீதிக்கான ஒதுக்கு) திஸர ஹாட்வெயார் கடை அருகே இருக்கின்றது. இவ்வீதியில் விற்பனைகுரிய ஆதனம் வலப்பக்கத்தில் அமைந்துள்ளது.*

***3. பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று, கெஸ்பேவை பிரதேச சபையின் பொரலஸ்கமுவை உப அலுவலக எல்லைக்குள் , கட்டுவலையில் அமைந்துள்ளதும் ''மஹரகஹவத்தை மற்றும் நாகஹவத்த'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் விக்ரர் சந்திரதாஸ அவர்களால் தயாரிக் கப்பட்டு 1999, ஒகத்து 02 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 42/90 இல் குறிப்பிடப்பட்டு துண்டு வை என அடையாளமிடப்பட்டதுமான காணி***

***( காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 0றூ. 6.0 பே.)***

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- *கொழும்பு கோட்டையிலிருந்து கொழும்பு- இரத்தினபுரி மட்டக்களப்பு A4 வீதி வழியாக மயூராபதி அம்மன் கோயிலை கடந்ததும் வலப்பக்கத்தில் ஹொரணை வீதி இருக்கின்றது. ஹொரணை வீதியில் ஏறக்குறைய 9 கிலோ மீற்றருக்கு அப்பால் கட்டுவாவளை சந்தியை அடைவதற்கு முன்னர் இடது பக்கத்தில் சத்தானந்த மாவத்தை இருக்கின்றது, சத்தானந்த மாவத்தையில் ஏறக்குறைய 200 மீற்றருக்கு அப்பால் 20 அடி அகல வீதி வழியில் ''T'' சந்தி யின் இடது பக்கத்தில் 15 அடி அகல வீதி ஒதுக்கு இருக்கின்றது. விற்பனைக்குரிய ஆதனம் இவ்வீதி ஒதுக்கு வழியே வலப்பக்கத்தில் இரண்டாம் துண்டாக அமைந்துள்ளது.*

*(கடப்பாடுடையவரான /ஈடுவைத்தவரான அபேவர்தன டிஸ்ரிபிூட்டர்ஸ் (பிவீரி) லிமிட்டட் மற்றும் ஈடுவைத்தவரான நிமல் அபேவர்தன (கடப்பாடுடையவரான கம்பனியின் பணிப்பாளர்) ஆகியோர், பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2003, மே 22 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை மிதக்கும் ஈட்டு முறி இல. 570 அத்துடன் 2006, திசெம்பர் 13, 2007, ஒற்றோபர் 04, 2008, திசெம்பர் 19, 2009, பெப்புருவரி 05, 2011, ஒற்றோபர் 27, மற்றும் 2016, பெப்புருவரி 19 ஆகிய திகதிகளிடப்பட்ட மேலதிக ஈட்டு முறி இலக்கங்கள் முறையே 1155, 1385, 1709, 1728, 2231 மற்றும் 2759 அத்துடன் 2007, ஒற்றோபர் 04 திகதியிடப்பட்ட முதன்மை மிதக்கும் ஈட்டு முறி இல. 1387 அத்துடன் 2011, ஒற்றோபர் 27 ஆந் திகதியிடப்பட்ட இரண்டாம் மிதக்கும் ஈட்டு முறி இல. 2229 ஆகிய அனைத்தினதும் அத்துடன் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த*

*நொத்தாரிசு வீ. சீ. டீ. பொன்சேக்கா அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு 2014, மாச்சு 18 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை மிதக்கும் ஈட்டு முறி இல. 844 அத்துடன் 2014, திசெம்பர் 19 ஆம் திகதியிடப்பட்ட இரண்டாம் மிதக்கும் ஈட்டு முறி இல. 1021 ஆகிய இரண்டினதும் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள்.)*

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், மேற்குறிப்பிடப்பட்ட 1 ஆம், 2 ஆம், மற்றும் 3 ஆம் ஆதனங்களை முறையே 2018, சனவரி 10ஆந் திகதி மு.ப.10.00 , மு.ப.11.00 மற்றும் மு.ப.11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு**.- 2017.11.17 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2017.12.05 ஆந் திகதிய "த ஐலண்ட்", "திவயின" மற்றும் 2017.12.06 ஆந் திகதிய "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூர் அதிகாரசபைக் கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம் மட்டும்) ;
4. மொத்த விற்பனைச் செலவு மற்றும் ஏனைய கட்டணங்கள்;
5. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் (ரூபா 3,000);
6. எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,000 ரூபா மற்றும் விற்பனையில் உறப்பட்ட வேறேதேனும் கட்டணங்கள் எவையேனுமிருப்பின்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ( தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப் பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் , ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் (பத்து வீதம்)10% ஐத் தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும் " கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன்ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க. முகாமையாளர் - அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011- 4667227 /011-4667130.

துசித்த கருணாரத்ன,
நீதிமன்ற ஆணையாளர் மற்றும்
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல.182/3 (50/3), விஹார மாவத்தை,
கொலன்னாவை.
தொலைபேசி இல. : 011-3068185
தொலைநகல் : 011-2572940

12- 771

**பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ. க.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

***1. பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், ( மாத்தளை பதிவுப் பிரிவிற்குள்), மாத்தளை மாநகர சபை எல்லைகளுக்குள் , மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவு, அளுவிஹாரே கிராம அலுவலர் பிரிவு, அளுவிஹாரேயில் அமைந்துள்ளதும், "ருகத்தனயா வத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஓ. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 2016.01.08. ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 5228 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான காணி)***

***( காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 0றூ . 20 பே.)***

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி**.- மாத்தளை பசாரிலிருந்து தம்புள்ளை பிரதான வீதி வழியே ஏறக்குறைய 1 கிலோமீற்றர் (கல்வெட்டு 27/1 மற்றும் 27/2) சென்று சேர் ரிச்சர்ட் அலுவிஹாரே மாவத்தைக்கு இடப்பக்கம் திரும்பி மேலும் 50 மீற்றர் சென்று 15 அடி அகல கொங்கிறீட் இடப்பட்ட மோட்டார் வண்டி செல்லக்கூடிய வீதிக்கு இடப்பக்கம் திரும்பி இவ் விற்பனைக்குரிய ஆதனத்தை அடைவதற்கு மேலும் 100 மீற்றர் செல்லவும்.

***2. பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம்) ( மாத்தளை பதிவுப் பிரிவிற்குள்), மாத்தளை மாநகர சபை எல்லைகளுக்குள் , மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவு, அளுவிஹாரே கிராம அலுவலர் பிரிவு, அளுவிஹாரேயில் அமைந்துள்ளதும், "ருகத்தனயா வத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் யூ.எச். பீ. கே. எம். ரீ. அங்கம்மன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2008.11.15 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 2504 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான காணி)***

***( காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 1றூ . 2.3 பே.)***

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி**.- மாத்தளை பசாரிலிருந்து தம்புள்ளை பிரதான வீதி வழியே சேர் ரிச்சர்ட் அலுவிஹாரே மாவத்தை வரை ஏறக்குறைய 1 கிலோ மீற்றர் கல்வெட்டு (27/1 மற்றும் 27/2 ) சென்று இவ் விற்பனைக்குரிய ஆதனத்தை அடையலாம்.

*(கடப்பாடுடையவரான/ ஈடுவைத்தவரான ஷமிந்த அசித்த குலதுங்க பிரசித்த நொத்தாரிசு நில்னி வேகொடபொல அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2016.02.02 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 1720 அத்துடன் 2016.02.02 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 1718 மற்றும் 2017.01.05 ஆந் திகதியிடப்பட்ட இரண்டாம் ஈட்டுமுறி இல. 2121 ஆகிய அனைத்தினதும் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்) .*

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், மேற்குறிப்பிடப்பட்ட (1) ஆம் மற்றும் (2) ஆம் ஆதனங்களை முறையே 2018, சனவரி 12 ஆந் திகதி முறையே மு.ப.11.00 மற்றும் மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2017.11.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2017.11.15 ஆந் திகதிய ''த ஐலண்ட்'' ''திவயின'' மற்றும் ''தினக்குரல்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூர் அதிகாரசபைக் கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம் மட்டும்) ;
4. விளம்பரச் செலவுக் கட்டணங்கள்;
5. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம்;
6. எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,500 ரூபா மற்றும் விற்பனையில் உறப்பட்ட வேறேதேனும் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ( தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் , ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐத் தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும் '' கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன்ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. முகாமையாளர் - அறவீடுகள்'' அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011- 4667230.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர் மற்றும்
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
மாவில்மட,
கண்டி,
தொலைபேசி /தொலைநகல் இல. : 081-2210595.
செல்லிட தொலைபேசி இல. : 071-4755974, 071-4962449

12- 773

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

லக்சிறி ஓட்டோ எண்ட்டபிரைசர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கணக்கு இல. 0137 1000 0837

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர் சபையினால் 2017.09.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2017.10.20 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 2017.10.09 ஆந் திகதிய ''திவயின'' (Divaina), ''ஐலண்ட்''(Island), ''தினக்குரல் '' (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே அறுபத்தி ஒரு இலட்சத்து பதினோராயிரத்து எழுநூற்றி பன்னிரண்டு ரூபா நாற்பது சதம் (ரூபா 1,61,11,712.40) 2017, ஓகத்து10 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (ரூபா 1,50,00,000.00) கட்டணத்திற்காக Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு தசம் ஐந்து வீதம் (4.5%) (floor rate 16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ.டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2018.01.24 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் என்னால் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றேன்.

#### அட்டவணை

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோரலே மெதபத்து சீத்தாவக்கை பிரதேச சபை மற்றும் சீத்தாவக்கை பிரதேச செயலாளர் பிரிவின் (கிராம அலுவலர் பிரிவு இல. 433B) ஹங்வெல்லை கிராம அலுவலர் பிரிவின் ஹங்வெல்லையில் அமைந்த பாஹாத்தகம வீதி வரிமதிப்பீட்டு இல. 7/E/1 ஐ ஏற்ற ''பிலின் காஹாவத்த எனும் அப்பல்லெவல ஓவிட்ட'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் சேன இத்தமல்கொட என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, ஓகத்து 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 177/2013 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 12 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. ஜே. நானயக்கார என்பவரால் தயாரிக்கப்பட்ட 1979, நவெம்பர் 20 ஆந் திகதியிடப் பட்ட இல. 2117 எனும் வரைபடத்தில் லொட் 13; கிழக்கு: அம்பலம வீதி; தெற்கு: கூறப்பட்ட இல. 2117 எனும் வரைபடத்தின் லொட்கள்

*7,9,10 மற்றும் 11; மேற்கு: சேதவத்த இடம என அழைக்கப்படும் காணி: ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின்நான்கு பேர்ச் (0ஏ.0றூ. 14பே.) அல்லது சைபர் தசம் சைபர் மூன்று ஐந்து நான்கு ஹெக்டெயர்கள் (Hec. 0.0354) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங் களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 177/ 2013 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.*

*கூறப்பட்ட இல. 177/2013 எனும் வரைபடத்தின் லொட் 12 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.*

*மேற்கூறப்பட்ட ஹங்வெல்லையில் அமைந்த "பிலின்காஹா வத்த எனும் அப்பல்லெவல ஓவிட்ட" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ ஜே நாணயக்கார என்பவரால் தயாரிக்கப்பட்ட 1979, நவெம்பர் 20ஆந் திகதியிடப்பட்ட இல. 2117 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 12 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கு: லொட் 13; கிழக்கு: அம்பலம வீதி; தெற்கு: லொட்கள் 7, 9, 10 மற்றும் 11 மற்றும் மேற்கு: சேதவத்த இடம என அழைக்கப்படும் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின் நான்கு பேர்ச்கள் (0ஏ. 0றூ. 14பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2117 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் C 734/125 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*பிணை உறுதி இல.668 இன் மீது பிணையாக அடகு வைக்கப்பட் டுள்ளது.*

*2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரலே மெதுபத்து சீத்தாவக்கை பிரதேச சபை மற்றும் சீத்தாவக்கை பிரதேச செயலாளர் பிரிவின் (கிராம அலுவலர் பிரிவு இல. 433B) ஹங்வெல்லை கிராம அலுவலர் பிரிவின் ஹங்வெல்லையில் அமைந்த ஹங்வெல்லை அவிஸ்ஸாவலை வீதி வரிமதிப்பீட்டு இல.18, 20 மற்றும் 20A ஐ ஏற்ற "பிலின்காஹாவத்த எனும் அப்பல்லெவல ஓவிட்ட" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் சேன இத்தமல்கொட என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, ஒகத்து 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 178/ 2013 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன– வடக்கு: நெடுஞ்சாலை; கிழக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் டப்ளியூ. எம். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 1612 எனும் வரைபடத்தில் லொட் C; தெற்கு: முன்னர் ஓ. ஜே. பெரேரா தற்போது எம். கே. பிரக்ஞாரத்னவின் வாரிசுகளின் சொத்து மற்றும் ; மேற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் டப்ளியூ. எம். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1979, ஏப்பிறல் 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 1612 எனும் வரைபடத்தில் லொட் A, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின் மூன்று தசம் நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 13.4பே.) அல்லது சைபர் தசம் சைபர் மூன்று மூன்று ஒன்பது ஹெக்டேயர்கள் (ஹெக். 0.0339) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 178/2013 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.*

*கூறப்பட்ட இல. 177/2013 எனும் வரைபடத்தின் லொட் 12 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.*

*மேற்கூறப்பட்ட ஹங்வெல்லையில் அமைந்த "பிலின்காஹா வத்த எனும் அப்பல்லெவல ஓவிட்ட" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டப்ளியூ. எம். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1979, ஏப்பிறல் 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 1612 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: நெடுஞ்சாலை; கிழக்கு: இங்கமைந்த லொட் C; தெற்கு: முன்னர் ஓ. ஜே. பெரேரா என்பவரின் சொத்து மற்றும் மேற்கு: இங்கமைந்த லொட் A ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின்மூன்று தசம் நான்கு ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 13.45பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1612 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 26/143 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*பிணை உறுதி இல. 670 இன் மீது பிணையாக அடகு வைக்கப்பட் டுள்ளது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*கம்பனிச் செயலாளர்.*

*12-774*

---

**மக்கள் வங்கி – கரை கடந்த வங்கி கூறு**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 29டி ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

***பெறுமதிமிக்க வர்த்தக ஆதனம் ( மீகொடை தெற்கு வட்டரெக்கவில் அதாவது பிளெக் பேர்ள் எஸ்டேட் ( கொழும்பு பாதுக்க பஸ் வீதி இல. 125 வழியே) மற்றும் தொகுதி /பக்கம் N 400/131 மற்றும் N 172/213இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது) அதன்கண் அமைந்துள்ள காணி, கட்டிடங்கள் மற்றும் பொறித் தொகுதியுடன் சேர்ந்து ஏல விற்பனை***

***காணியின் விஸ்தீரணம் : நான்கு ஏக்கர் சைபர் றூட் ஐந்து தசம் ஒன்பது ஐந்து பேர்ச்சுக்கள் ( 4ஏ. 0று, 5.95பே.)***

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்.**- கொடகமை சந்தியிலிருந்து மீகொடை நோக்கி ஏறக்குறைய 8 கிலோமீற்றர் செல்ல விற்பனைக்குரிய ஆதனம் இடப்பக்கத்தில் அமைந்துள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2018, சனவரி 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- 2016.03.11 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2016.02.26 ஆந் திகதிய ''தினமின'', ''டெயிலி நியுஸ்'' மற்றும் ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றி பெறும் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) தேசத்தைச் கட்டியெழும்பும் வரி கொள்வனவு விலையின் 2% ;
(3) பெறுமதி சேர்வரி மேற்கூறப்பட்ட கொள்வனவு விலையின் 15%;
(4) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1%( ஒரு வீதம்) ;
(5) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்);
(6) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனும் இருப்பின்);
(7) கொள்வனவு விலையின் மேலும் 10% ( பத்து வீதம்) ஏலவிற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

கொள்வனவு விலையின் மிகுதி 80% ஐ விற்பனைத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ''கொழும்பு 2, மக்கள் வங்கி, தலைமை அலுவலகம், 10 ஆவது தளம், விசேட சொத்துக்கள் கூறு, அறவீடுகள், பிரதம முகாமையாளர்'' அவர்களிடம் செலுத்த வேண்டும்.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம முகாமையாளர், விசேட சொத்துக்கள் கூறு, மக்கள் வங்கி , 10 ஆவது தளம், தலைமை அலுவலகம், கொழும்பு 2.
தொலைபேசி இல. : 011-2481382, 011- 2481546 , 011-2451395. தொலைநகல் இல.: 011- 2431033.

எவ்வித முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தவோ அல்லது இரத்துச் செய்யவோ வங்கிக்கு முழு அதிகாரம் உள்ளது.

டல்லாஸ் கெலாட்,
நிபுணத்துவம் பெற்ற, உத்தரவு
பெற்ற ஏலதாரர்.

இல. 146/3,
கல்தேரா கார்டின்ஸ்,
துட்டுகெமுனு தெருவிற்கப்பால்,
கொஹுவளை.

தொலைபேசி இல.: 011-4302622,011-4302623, 011-4367111.
தொலைநகல்: 011-2856013

12-786